## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

### புரட்டாசி 7, பிரஜோற்பத்தி — திருவள்ளுவர் ஆண்டு 2022.

### 1991 செப்டம்பர் 23, திங்கட்கிழமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 9–30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"குடிபுறங் காத்தோம்பிக் குற்றம் கடிதல்
வடுவன்று வேந்தன் தொழில்."

குடிகளைப் பிறர் வருத்தாமல் காத்துத் தானும் வருத்தாமல் காப்பாற்றி அவர்களுடைய குற்றங்களைத் தக்க தண்டனையால் ஒழித்தல் அரசனுடைய தொழில் ஆகும் ; பழி அன்று.

### 1. இரங்கல் குறிப்புகள்.

### முன்னாள் உறுப்பினர்கள் மறைவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இரங்கல் குறிப்புகள்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான டாக்டர் கோ. பத்மநாபன் அவர்கள் 2–9–1991 ஆம் நாளன்றும், அன்றைய ஒருங்கிணைந்த சென்னை சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான திரு. சி. சுப்பராயலு அவர்கள் 13–9–1991 ஆம் நாளன்றும் மறைவுற்றதை இப் பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் கோ. பத்மநாபன் அவர்கள் 1971 ஆம் ஆண்டு முதல் 1976 ஆம் ஆண்டு வரை திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டம், திருநெல்வேலி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. சி. சுப்பராயலு அவர்கள் 1952 ஆம் ஆண்டு அனந்தபூர் மாவட்டம், தாட்டத்திரி தொகுதியிலிருந்து அன்றைய ஒருங்கிணைந்த சென்னை சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, ஆந்திர மாநிலம் அமையும் வரை, 30–9–1953 வரை பேரவையின் உறுப்பினராக நல்ல முறையில் பணியாற்றியுள்ளார். அன்னார்களது மறைவு குறித்து அவர்களை இழந்து விட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலை இப்பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

[பேரவைத் தலைவர்] [1991 செப்டம்பர் 23

இயற்கை எய்தியவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிடங்கள் அமைதியாக இருந்து அஞ்சலி செலுத்தினர்.)

## 2. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் — விடைகள்.

வினா எண் 61—திருமதி ரமணி நல்லதம்பி. மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர்.

61—

### இராதாபுரத்தில் குற்றவியல் நீதிமன்றம்.

*57 திருமதி ரமணி நல்லதம்பி:
மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம் இராதாபுரத்திற்கு குற்றவியல் நீதிமன்றம் (Judicial Magistrate Court) கொண்டு வரும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இதுவரை இராதாபுரத்திற்கு குற்றவியல் நீதிமன்றம் கொண்டு வர வேண்டுமென்று பொது மக்களிடமிருந்து கோரிக்கை எதுவும் பெறப்படவில்லை.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய இராதாபுரம் தொகுதியிலே இதுவரைக்கும் எந்தக் கோர்ட்டுமே இல்லை. நான் கடந்த இரண்டு ஆண்டுகளாக அதற்கு முயற்சி செய்து வந்தேன். நாங்குநேரித் தொகு